# thiruththoNDar purANam (periya purANam) panniraNDAm tirumuRai

## (in tamil script, TSCII format)

## சேக்கிழார் அருளிய

# திருத்தொண்டர் புராணம் என்ற பெரிய புராணம்

## பன்னிரண்டாம் திருமுறை

### இரண்டாம் காண்டம்

# 13 வெள்ளானைச் சருக்கம்

---

This page is courtasy of Project Madurai. This thirumuRai is being proof-read. So this current form may have errors in it.

---

periya puranam in tscii format file generated from Koeln version using convertor (two corrections n2 and jn) file yet to be proof/read file edited to be in TSCII 1.7 ENCODING ------------------------------------------------------



| Periya puranam text | | | |
|---|---|---|---|
| Chapter No. | Transliterated text | TSCII HTML format | Tamil PDF |
| 1 | thirumalaic carukkam | திருமலைச் சருக்கம் | PDF |
| 2 | thillaivAzandhaNar carukkam | தில்லைவாழந்தணர் சருக்கம் | PDF |
| 3 | ilaimalintha carukkam | இலைமலிந்த சருக்கம் | PDF |
| 4 | mummaiyAl ulakANDa | மும்மையால் | PDF |

| | | | |
|---|---|---|---|
| | carukkam | உலகாண்ட சருக்கம் | |
| 5 | thiruninRa carukkam | திருநின்ற சருக்கம் | PDF |
| 6 | vambaRA varivaNDu carukkam - thirunyAna cambanthar purANam | வம்பறா வரிவண்டு சருக்கம் - திருஞானசம்பந்தர் புராணம் | PDF |
| | vambaRA varivaNDu carukkam - EyarkOn muthalAya nAyanmArkaL | வம்பறா வரிவண்டு சருக்கம் - ஏயர்கோன் முதலாய நாயன்மார்கள் | PDF |
| 7 | vArkoNDa vanamulaiyAL carukkam | வார்கொண்ட வனமுலையாள் சருக்கம் | PDF |
| 8 | poyyaDimaiyillAtha pulavar carukkam | பொய்யடிமை இல்லாத புலவர் சருக்கம் | PDF |
| 9 | kaRaikkaNDan carukkam | கறைக்கண்டன் சருக்கம் | PDF |
| 10 | kaDal cUzntha carukkam | கடல் சூழ்ந்த சருக்கம் | PDF |
| 11 | paththarAyp paNivAr carukkam | பத்தராய்ப் பணிவார் சருக்கம் | PDF |
| 12 | manniyacIrc carukkam | மன்னியசீர்ச் சருக்கம் | PDF |
| 13 | veLLAnaic carukkam | வெள்ளானைச் சருக்கம் | PDF |


திருச்சிற்றம்பலம்

13 வெள்ளானைச் சருக்கம்

1. மூலம் ஆன திருத்தொண்டத் தொகைக்கு முதல்வராய் இந்த 4229-1
ஞாலம் உய்ய எழுந்து அருளும் நம்பி தம்பிரான் தோழர் 4229-2
காலை மலர்ச் செம் கமலக்கண் கழற்று அறிவார் உடன் கூட 4229-3
ஆலம் உண்டார் திருக் கயிலை அணைந்தது அறிந்தபடி உரைப்பாம் 4229-4

2. படியில் நீடும் பத்தி முதல் அன்பு நீரில் பணைத்து ஓங்கி 4230-1
வடிவு நம்பி ஆரூரர் செம் பொன் மேனி வனப்பு ஆகக் 4230-2
கடிய வெய்ய இருவினையின் களைகட்டு எழுந்து கதிர் பரப்பி 4230-3
முடிவு இலாத சிவ போகம் முதிர்ந்து முறுகி விளைந்தது ஆல் 4230-4

3. ஆரம் உரகம் அணிந்தபிரான் அன்பர் அணுக்க வன் தொண்டர் 4231-1
ஈர மதுவார் மலர்ச்சோலை எழில் ஆரூரில் இருக்கும் நாள் 4231-2
சேரர் பெருமாள் தனை நினைந்து தெய்வப் பெருமாள் கழல் வணங்கிச் 4231-3
சாரல் மலைநாடு அணைவதற்குத் தவிரா விருப்பின் உடன் போந்தார் 4231-4

4. நல்நீர்ப் பொன்னித் திரு நாட்டு நாதர் மகிழும் திருப்பதிகள் 4232-1
முன்னி இறைஞ்சி அகன்று போய் முல்லைப் படப்பைக்கு ஒல்லைமான் 4232-2
துன்னி உகைக்கும் குடக் கொங்கில் அணைந்து தூய மதிவான் நீர் 4232-3

சென்னி மிசை வைத்தவர் செல்வத் திருப்புக்கு ஒளியூர் சென்று அடைந்தார் 4232-4

5. மறையோர் வாழும் அப்பதியின் மாட வீதி மருங்கு அணைவார் 4233-1
நிறையும் செல்வத்து எதிர் மனைகள் இரண்டில் நிகழ் மங்கல இயங்கள் 4233-2
அறையும் ஒலி ஒன்றினில் ஒன்றினில் அழுகை ஒலி வந்து எழுதலும் ஆங்கு 4233-3
உறையும் மறையோர்களை இரண்டும் உடனே நிகழ்வது என் என்றார் 4233-4

6. அம் தண் ஆளர் வணங்கி அரும் புதல்வர் இருவர் ஐ ஆண்டு 4234-1
வந்த பிராயத்தினர் குளித்த மடுவில் முதலை ஒரு மகவை 4234-2
முந்த விழுங்க பிழைத்தவனை முந்நூல் அணியும் கலியாணம் 4234-3
இந்த மனை மற்று அந்தமனை இழந்தார் அழுகை என்று உரைத்தார் 4234-4

7. இத்தன்மையினைக் கேட்டு அருளி இரங்கும் திரு உள்ளத்தினர் ஆம் 4235-1
மொய்த்த முகைத்தார் வன்தொண்டர் தம்மை முன்னே கண்டு இறைஞ்ச 4235-2
வைத்த சிந்தை மறையோனும் மனைவிதானும் மகிழ் இழந்த 4235-3
சித்த சோகம் தெரியாமே வந்து இருந்தாள் இறைஞ்சினார் 4235-4

8. துன்பம் அகல முகம் மலர்ந்து தொழுவார் தம்மை முகம் நோக்கி 4236-1
இன்ப மைந்தன் தனை இழந்தீர் நீரோ என்ன எதிர் வணங்கி 4236-2
முன்பு புகுந்து போனது அது முன்னே வணங்க முயல் கின்றோம் 4236-3
அன்பு பழுது ஆகாமல் எழுந்து அருளப் பெற்றேம் எனத் தொழுதார் 4236-4

9. மைந்தன் தன்னை இழந்த துயர் மறந்து நான் வந்து அணைந்து அதற்கே 4237-1
சிந்தை மகிழ்ந்தார் மறையோனும் மனைவி தானும் சிறுவனையான் 4237-2
அந்த முதலையின் வாய் நின்றும் அழைத்துக் கொடுத்த அவிநாசி 4237-3
எந்தை பெருமான் கழல் பணிவேன் என்றார் சென்றார் இடர் களைவார் 4237-4

10. இவ்வாறு அருளிச் செய்து அருளி இவர்கள் புதல்வன் தனைக் கொடிய 4238-1
வெவ்வாய் முதலை விழுங்கும் மடு எங்கே என்று வினவிக் கேட்டு 4238-2
அவ்வாழ் பொய்கைக் கரையில் எழுந்தருளி அவனை அன்று கவர் 4238-3
வெவ்வாள் எயிற்று முதலை கொடு வருதற்கு எடுத்தார் திருப்பதிகம் 4238-4

11. உரைப்பார் உரை என்று எடுத்த திருப்பாட்டு முடியாமுன் உயர்ந்த 4239-1
வரைப் பான்மையில் நீள் தடம்புயத்து மறலி மைந்தன் உயிர் கொணர்ந்து 4239-2
திரைப்பாய் புனலின் முதலைவாயில் உடலில்சென்ற ஆண்டுகளும் 4239-3
தரைப்பால் வளர்ந்தது என நிரம்ப முதலை வாயில் தருவித்தான் 4239-4

12. பெருவாய் முதலை கரையின் கண் கொடு வந்து உமிழ்ந்த பிள்ளைதனை 4240-1
உருகா நின்ற தாய் ஓடி எடுத்துக் கொடுவந்து உயிர் அளித்த 4240-2
திருவாளன் தன் சேவடிக்கீழ் மறையோன் ஒடு வீழ்ந்தாள் 4240-3
மரு ஆர் தருவின் மலர் மாரி பொழிந்தார் விசும்பில் வானோர்கள் 4240-4

13. மண்ணில் உள்ளார் அதிசயித்தார் மறையோர் எல்லாம் உத்தரியம் 4241-1
விண்ணில் ஏற விட்டு ஆர்த்தார் வேத நாதம் மிக்கு எழுந்தது 4241-2
அண்ணல் ஆரும் அவிநாசி அரனார் தம்மை அருமறையோன் 4241-3
கண்ணின் மணிஆம் புதல்வனையும் கொண்டு பணிந்தார் காசினிமேல் 4241-4

14. பரவும் பெருமைத் திருப்பதிகம் பாடி பணிந்து போந்து அன்பு 4242-1
விரவு மறையோன் காதலனை வெண் நூல் பூட்டி அண்ணலார் 4242-2
முரசம் இயம்பக் கலியாணம் முடித்து முடிச் சேரலர் தம்பால் 4242-3
குரவ மலர்ப் பூம் தண் சோலை குலவு மலை நாடு அணைகின்றார் 4242-4

15. சென்ற சென்ற குட புலத்துச் சிவனார் அடியார் பதிகள் தொறும் 4243-1
நன்று மகிழ் உற்று இன்பு உற்று நலம் சேர் தலமும் கானமும் 4243-2
துன்று மணிநீர்க் கான் ஆறும் உறு கல் சுரமும் கடந்து அருளி 4243-3
குன்ற வள நாட்டு அகம் புகுந்தார் குலவும் அடியேன் அகம்புகுந்தார் 4243-4

16. முன் நாள் முதலை வாய்புக்க மைந்தன் முன்போல் வரமீட்டுத் 4244-1

தென் ஆரூரர் எழுந்து அருளா நின்றார் என்று சேரர் பிரார்க்கு 4244-2
அந் நாட்டு அரனார் அடியார்கள் முன்னே ஓடி அறிவிப்பப் 4244-3
பொன் ஆர் கிழியும் மணிப்பூணும் காசும் தூசும் பொழிந்து அளித்தார் 4244-4

17. செய்வது ஒன்றும் அறியாது சிந்தை மகிழ்ந்து களி கூர்ந்து 4245-1
என் ஐயன் அணைந்தான் எனை ஆளும் அண்ணல் அணைந்தான் அரூரில் 4245-2
சைவன் அணைந்தான் என் துணை ஆம் தலைவன் அணைந்தான் தரணி எலாம் 4245-3
உய்ய அணைந்தான் அணைந்தான் என்று ஓகை முரசம் சாற்று வித்தார் 4245-4

18. பெருகு நூல் அமைச்சர்களை அழைத்துப் பெரியோர் எழுந்து அருளப் 4246-1
பொருவு இல் நகரம் அலங்கரித்துப் பண்ணிப் பயணம் புறப்படுவித்து 4246-2
அருவி மத மால் யானையினை அணைந்து மிசை கொண்ட அரசர் பெரும் 4246-3
தெருவு கழிய எதிர் வந்தார் சேரர் குலம் உய்ந்திட வந்தார் 4246-4

19. மலை நாட்டு எல்லை உள் புகுந்து வந்த வன் தொண்டரை வரையில் 4247-1
சிலை நாட்டிய வெல் கொடித்தானைச் சேரர் பெருமான் எதிர் சென்று 4247-2
தலை நாள் கமலப் போது அனைய சரணம் பணியத் தாவில் பல 4247-3
கலை நாட்டு அமுத ஆரூரர் தாமும் தொழுது கலந்தனர் ஆல் 4247-4

20. சிந்தை மகிழும் சேரலனார் திரு ஆரூரர் எனும் இவர்கள் 4248-1
தந்த மணி மேனிகள் வேறாம் எனினும் ஒன்றாம் தன்மையர் ஆய் 4248-2
முந்த எழும் காதலில் தொழுது முயங்கு உதியர் முதல் வேந்தர் 4248-3
எந்தை பெருமான் திருவாரூர்ச் செல்வம் வினவி இன்பு உற்றார் 4248-4

21. ஒருவர் ஒருவரில் கலந்து குறைபாடு இன்றி உயர் காதல் 4249-1
இருவர் நண்பின் செயல் கண்ட இரண்டு திறத்து மாந்தர்களும் 4249-2
பெருகு மகிழ்ச்சி கலந்து ஆர்த்தார் பெருமாள் தமிழின் பெருமாளை 4249-3
வருகை வரையின் மிசை ஏற்றித் தாம் பின் மதிவெண் குடை கவித்தார் 4249-4

22. உதியர் பெருமாள் பெரும் சேனை ஓதம் கிளர்ந்தது என ஆர்ப்ப 4250-1
கதிர் வெண் திரு நீற்று அன்பர் குழாம் கங்கை கிளர்ந்தது என ஆர்ப்ப 4250-2
எதிர் வந்து இறைஞ்சும் அமைச்சர் குழாம் ஏறும் இவுளித் துகள் ஆர்ப்ப 4250-3
மதி தங்கிய மஞ்சு அணி இஞ்சி வஞ்சி மணிவாயிலை அணைந்தார் 4250-4

23. ஆரண மொழிகள் முழங்கிட ஆடினர் குணலைகள் அந்தணர் 4251-1
வாரண மத மழை சிந்தின வாசிகள் கிளர் ஒளி பொங்கின 4251-2
பூரண கலசம் மலிந்தன பூ மழை மகளிர் பொழிந்திடும் 4251-3
தோரண மருகு புகுந்தது தோழர்கள் நடவிய குஞ்சரம் 4251-4

24. அரிவையர் தெருவில் நடம் பயில் அணி கிளர் தளிர் அடி தங்கிய 4252-1
பரிபுர ஒலிகள் கிளர்ந்தன பணை முரசு ஒலிகள் பரந்தன 4252-2
சுரிவனை நிரைகள் முரன்றன துணைவர்கள் இருவரும் வந்து அணி 4252-3
விரிதரு பவன நெடும் கடை விறல் மத கரியின் இழிந்தனர் 4252-4

25. தூ நறு மலர் தரளம் பொரிதூவி முன் இரு புடையின் கணும் 4253-1
நான் மறை முனிவர்கள் மங்கல நாம நன்மொழிகள் விளம்பிட 4253-2
மேல் நிறை நிழல் செய வெண் குடை வீசிய கவரி மருங்கு உற 4253-3
வானவர் தலைவரும் நண்பரும் மாளிகை நடுவு புகுந்தனர் 4253-4

26. அரி அணை அதனில் விளங்கிட அடல் மழ விடை என நம்பியை 4254-1
வரி மலர் அமளி அமர்ந்திட மலையர்கள் தலைவர் பணிந்து பின் 4254-2
உரிமை நல் வினைகள் புரிந்தன உரை முடிவில என முன் செய்து 4254-3
பரிசனம் மனம் மகிழும்படி பல பட மணி நிதி சிந்தினர் 4254-4

27. இன்ன தன்மையில் உதியர்கள் தலைவர்தாம் இடர் கெட முனைப்பாடி 4255-1
மன்னர் தம் உடன் மகிழ்ந்து இனிது உறையும் நாள் மலை நெடு நாடுஎங்கும் 4255-2
பன்னகம் புனை பரமர் தம் திருப்பதி பல உடன் பணிந்து ஏத்திப் 4255-3

பொன் நெடும் தட மூது எயில் மகோதையில் புகுந்தனர் வன்தொண்டர் 4255-4

28. ஆய செய்கையில் நாள் பல கழிந்தபின் அரசர்கள் முதல் சேரர் 4256-1
தூய மஞ்சனத் தொழில் இனின் தொடங்கிடத் துணைவராம் வன்தொண்டர் 4256-2
பாய கங்கை சூழ் நெடும் சடைப் பரமரைப் பண்டுதாம் பிரிந்து எய்தும் 4256-3
சேய நல்நெறி குறுகிடக் குறுகினார் திருவஞ்சைக் களம் தன்னில் 4256-4

29. கரிய கண்டர் தம் கோயிலை வலம் கொண்டு காதலால் பெருகு அன்பு 4257-1
புரியும் உள்ளத்தர் உள் அணைந்து இறைவர் தம் பூம் கழல் இணை போற்றி 4257-2
அரிய செய்கையில் அவனியில் விழுந்து எழுந்து அலைப்பு உறும் மனை வாழ்க்கை 4257-3
சரியவே தலைக்குத் தலை மாலை என்று எடுத்தனர் தமிழ் மாலை 4257-4

30. எடுத்த அத்திருப் பதிகத்தின் உள் குறிப்பு இவ் உலகினில் பாசம் 4258-1
அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டும் என்று அன்பர் அன்பினில் பாடக் 4258-2
கடுத்த தும்பிய கண்டர் தம் கயிலையில் கணத்தவருடன் கூடத் 4258-3
தடுத்த செய்கைதான் முடிந்திடத் தங்கு அழல் சார்பு தந்து அளிக்கின்றார் 4258-4

31. மன்றல் அம் தரு மிடைந்த பூம் கயிலையில் மலை வல்லியுடன் கூட 4259-1
வென்றி வெள்விடைப் பாகர் தாம் வீற்று இருந்து அருளிய பொழுதின் கண் 4259-2
ஒன்று சிந்தை நம் ஊரனை உம்பர் வெள் யானையின் உடன் ஏற்றிச் 4259-3
சென்று கொண்டு இங்கு வாரும் என்று அயன் முதல் தேவர் கட்கு அருள் செய்தார் 4259-4

32. வான நாடர்கள் அரி அயன் முதலினோர் வணங்கி முன் விடை கொண்டு 4260-1
தூ நலம் திகழ் சோதி வெள் யானையும் கொண்டு வன் தொண்டர்க்குத் 4260-2
தேன் அலம்பு தண் சோலை சூழ் மாகோதையில் திருவஞ்சைக் களம் சேரக் 4260-3
கால் நிலம் கொள வலம் கொண்டு மேவினார் கடிமதில் திருவாயில் 4260-4

33. தேவர் தம் குழாம் நெருங்கிய வாய்தலில் திருநாவல் ஊரர்தம் 4261-1
காவல் மன்னரும் புறப்பட எதிர்கொண்டு கயிலை வீற்று இருக்கின்ற 4261-2
பூ அலம்பு தண் புனல் சடை முடியவர் அருளி இப் பாடு என போற்றி 4261-3
ஏவல் என்றபின் செய்வது ஒன்று இலாதவர் பணிந்து எழுந்து எதிரே ஏற்றாத 4261-4

34. ஏற்ற தொண்டரை அண்டர் வெள் ஆனையின் எதிர் வலம் கொண்டு ஏற்ற 4262-1
நால்தடம் கடல் முழக்கு என ஐவகை நாதம் மீது எழுந்து ஆர்ப்பப் 4262-2
போற்றி வானவர் பூமழை பொழிந்திடப் போதுவார் உயிர் எல்லாம் 4262-3
சாற்றும் மாற்றங்கள் உணர் பெரும் துணைவரை மனத்தினில் கொடு சார்ந்தார் 4262-4

35. சேரர் தம்பிரான் தோழர் தம் செயல் அறிந்து அப்போதே 4263-1
சார நின்றது ஓர் பரியினை மிசைக் கொண்டு திருவஞ்சைக் களம்சார்வார் 4263-2
வீர வெண் களிறுகைத்து விண்மேல் செலும் மெய்த்தொண்டர் தமைக் கண்டார் 4263-3
பாரில் நின்றிலர் சென்றதம் மனத்தொடு பரியும் முன் செலவிட்டார் 4263-4

36. விட்ட வெம்பரிச் செவியினில் புவி முதல் வேந்தர் தாம் விதியாலே 4264-1
இட்டம் ஆம் சிவ மந்திரம் ஓதலின் இரு விசும்பு ஏழப் பாய்ந்து 4264-2
மட்டு அலர்ந்த பைந் தெரியல் வன் தொண்டர் மேல் கொண்ட மாதங்கத்தை 4264-3
முட்ட எய்தி வலம் கொண்டு சென்றது மற்று அதன் முன் ஆக 4264-4

37. உதியர் மன்னவர் தம் பெரும் சேனையின் உடன் சென்ற படைவீரர் 4265-1
கதிகொள் வாசியில் செல்பவர் தம்மைத்தம் கண்புலம்படும் எல்லை 4265-2
எதிர் விசும்பினில் கண்டு மின் கண்டிலர் ஆதலின் எல்லாரும் 4265-3
முதிரும் அன்பினில் உருவிய சுரிகையால் முறை முறை உடல் வீழ்ந்தார் 4265-4

38. வீரயாக்கையை மேல் கொண்டு சென்று போய் வில்லவர் பெருமானைச் 4266-1

சார முன் சென்று சேவகம் ஏற்றனர் தனித் தொண்டர்மேல் கொண்ட 4266-2
வாரும் மும் மதத்து அருவி வெள் யானைக்கு வயப் பரி முன் வைத்துச் 4266-3
சேரர் வீரரும் சென்றனர் மன்றவர் திருமலைத் திசை நோக்கி 4266-4

39. யானை மேல் கொண்டு செல்கின்ற பொழுதினில் இமையவர் குழாம் என்னும் 4267-1
தானை முன் செலத் தான் எனை முன் படைத்தான் எனும் தமிழ் மாலை 4267-2
மானவன் தொண்டர் பாடி முன் அணைந்தனரர் மதி நதி பொதி வேணித் 4267-3
தேன் அலம்பு தண் கொன்றையார் திருமலைத் தென்திசைத் திருவாயில் 4267-4

40. மாசு இல் வெண்மை சேர் பேர் ஒளி உலகு எலாம் மலர்ந்திட வளர் மெய்ம்மை 4268-1
ஆசு இல் அன்பர் தம் சிந்தை போல் விளங்கிய அணி கிளர் மணிவாயில் 4268-2
தேசு தங்கிய யானையும் புரவியும் இழிந்து சேண் இடைச் செல்வார் 4268-3
ஈசர் வெள்ளி மா மலைத் தடம் பல கடந்து எய்தினார் மணிவாயில் 4268-4

41. அம் கண் எய்திய திரு அணுக்கன் திரு வாயிலின் அடல் சேரர் 4269-1
தங்கள் காவலர் தடை உண்டு நின்றனர் தம்பிரான் அருளாலே 4269-2
பொங்கு மா மதம் பொழிந்த வெள் யானையின் உம்பர் போற்றிடப் போந்த 4269-3
நங்கள் நாவலூர் காவலர் நண்ணினார் அண்ணலார் திருமுன்பு 4269-4

42. சென்று கண்நுதல் திருமுன்பு தாழ்ந்து வீழ்ந்து எழுந்து சேண் இடை விட்டு 4270-1
அகன்று கோவினைக் கண்டு அணைந்தது எனக் காதலின் விரைந்து எய்தி 4270-2
நின்று போற்றிய தனிப் பெரும் தொண்டரை நேர் இழை வலப் பாகத்து 4270-3
ஒன்றும் மேனியர் ஊரனே வந்தனை என்றனர் உலகு உய்ய 4270-4

43. அடியனேன் பிழை பொறுத்து எனை ஆண்டு கொண்ட தொடக்கினை நீக்கி 4271-1
முடிவு இலா நெறி தரும் பெரும் கருணை என் தரத்ததோ என முன்னர் 4271-2
படியும் நெஞ்சொடு பல் முறை பணிந்து எழும் பரம்பரை ஆனந்த 4271-3
வடிவு நின்றது போன்று இன்ப வெள்ளத்து மலர்ந்தனர் வன் தொண்டர் 4271-4

44. நின்ற வன் தொண்டர் நீர் அணி வேணிய நின் மலர்க் கழல் சாரச் 4272-1
சென்று சேரலன் திரு மணி வாயிலின் புறத்தினன் எனச் செப்ப 4272-2
குன்ற வில்லியார் பெரிய தேவரை சென்று கொணர்க என அவர் எய்தி 4272-3
வென்றி வானவர்க்கு அருளிப்பாடு என அவர் கழல் தொழ விரைந்து எய்தி 4272-4

45. மங்கை பாகர் தம் திரு முன்பு சேய்த்து ஆக வந்தித்து மகிழ்வு எய்திப் 4273-1
பொங்கும் அன்பினில் சேரலர் போற்றிடப் புதுமதி அலைகின்ற 4273-2
கங்கைவார் சடைக் கயிலை நாயகர் திருமுறுவலின் கதிர் காட்டி 4273-3
இங்கு நாம் அழையாமை நீ எய்தியது என் என அருள் செய்தார் 4273-4

46. அரசர் அஞ்சலி கூப்பி நின்று அடியனேன் ஆரூரர் கழல் போற்றிப் 4274-1
புரசை யானை முன் சேவித்து வந்தனன் பொழியும் நின் கருணைத் தொண்டு 4274-2
இரை செய் வெள்ளம் முன் கொடுவந்து புகுதலின் திருமுன்பு வரப் பெற்றேன் 4274-3
விரைசெய் கொன்றை சேர் வேணியாய் இனி ஒரு விண்ணப்பம் உளது என்று 4274-4

47. பெருகு வேதமும் முனிவரும் துதிப்பு அரும் பெருமையாய் உனை அன்பால் 4275-1
திருலாப் புறம் பாடினேன் திருச்செவி சாத்திடப் பெற வேண்டும் 4275-2
மருவு பாசத்தை அகன்றிட வன்தொண்டர் கூட்டம் வைத்தாய் என்ன 4275-3
அருளும் ஈசரும் சொல்லுக என்றனர் அன்பரும் கேட்பித்தார் 4275-4

48. சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த திருலாப் புறம் கொண்டு 4276-1
நாரி பாகரும் நலம் மிகு திரு அருள் நயப்புடன் அருள் செய்வார் 4276-2
ஊரன் ஆகிய ஆலால சுந்தரன் உடன் அமர்ந்து இருவீரும் 4276-3
சார நம்கண் நாதர் ஆம் தலைமையில் தங்கும் என்று அருள் செய்தார் 4276-4

49. அன்ன தன்மையில் இருவரும் பணிந்து எழுந்து அருள் தலை மேல் கொண்டு 4277-1
மன்னும் வன்தொண்டர் ஆலால சுந்தரர் ஆகித் தாம் வழுவாத 4277-2
முன்னை நல்வினைத் தொழில் தலை நின்றார் முதல் சேரர் பெருமானும் 4277-3
நன்மை சேர் கண நாதராய் அவர் செயும் நயப்பு உறு தொழில் பூண்டார் 4277-4

50. தலத்து வந்துமுன் உதயம் செய் பரவையார் சங்கிலியார் என்னும் 4278-1
நலத்தின் மிகக் கவர் வல்வினைத் தொடக்கு அற நாயகி அருளாலே 4278-2
அலத்த மெல் அடிக் கமலினியார் உடன் அனிந்தை யார் ஆகி 4278-3
மலைத் தனிப் பெருமான் மகள் கோயிலில் தம் தொழில் வழிநின்றார் 4278-4

51. வாழி மாதவர் ஆலால சுந்தரர் வழி இடை அருள் செய்த 4279-1
ஏழ் இசைத் திருப்பதிகம் இவ் உலகினில் ஏற்றிட எறி முன்நீர் 4279-2
ஆழி வேந்தன் ஆம் வருணனுக்கு அளித்திட அவனும் அவ் அருள் சூடி 4279-3
ஊழியில் தனி ஒருவர் தம் திருவஞ்சைக் களத்தில் உய்த்து உணர்வித்தான் 4279-4

52. சேரர் காவலர் விண்ணப்பம் செய்த அத் திருலாப் புறம் அன்று 4280-1
சாரல் வெள்ளி அம் கயிலையில் கேட்ட மா சாத்தனார் தரித்து இந்தப் 4280-2
பாரில் வேதியர் திருப்பிடவூர் தனில் வெளிப்படப் பகர்ந்து எங்கும் 4280-3
நார வேலை சூழ் உலகினில் விளங்கிட நாட்டினர் நலத்தாலே 4280-4

53. என்றும் இன்பம் பெருகும் இயல்பினால் 4281-1
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட 4281-2
மன்று உளார் அடியார் அவர் வான் புகழ் 4281-3
நின்றது எங்கும் நிலவி உலகெலாம் 4281-4

திருச்சிற்றம்பலம்

வெள்ளானைச் சருக்கம் முற்றிற்று.

திருத்தொண்டர் புராணம் முற்றிற்று.

---

This file was last revised on 08 May 2004

---

See Also:
1. Stories of the nAyanmAr in English with Pictures

Back to periya purANam Page
Back to thirumuRai Page
Back to Shaiva Sidhdhantha Home Page